**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி: 30.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சட்டமன்ற பொதுக்கணக்கு குழு
## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழக அரசின் நிதியுதவியுடன் நடைபெறும் தற்போதைய வளர்ச்சித் திட்டங்களையும் கட்டமைப்பு வசதிகளையும் மதிப்பாய்வு செய்வதற்காக தலைவர் மற்றும் 5 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற பொதுக்கணக்குக் குழுவினருடன் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் 30.07.2025 அன்று பல்கலைக் கழகத்திற்கு வருகைப் புரிந்தனர். திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் தலைமையில் பொதுக்கணக்குக் குழு உறுப்பினர்களான திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பா. அப்துல்சமது, திரு. கோ. ஐயப்பன், திரு. எஸ். சேகர், திரு. கே. ஆர். ஜெயராம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பவன்குமார் கே. கிரியப்பநாவர், பல்கலைக்கழக இயக்குநர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.

இக்குழுவினரை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ஆர். தமிழ்வேந்தன் அவர்கள் வரவேற்றார். பொதுக்கணக்கு குழுவானது சுமார் 47 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவை பார்வையிட்டனர். அங்கு அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான அலங்கார தோட்டங்களையும் தாவர வகைகளையும் ஆய்வு செய்தனர். குறிப்பாக அங்கு அமையப்பட்டுள்ள மருத்துவ பயிர்களை உள்ளடக்கிய செயல்விளக்கத் திடலை பார்வையிட்டு அவைகளின் மருத்துவக் குணங்களை கேட்டறிந்தனர். அதனைத்

தொடர்ந்து பொதுக்கணக்குக் குழுவினர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகத்தை பார்வையிட்டனர். பூச்சி அருங்காட்சியகத்தில் பூச்சிகளின் கணினி மயமாக்கல், மூலக்கூறு பகுப்பாய்வு, பூச்சி ஹாலோகிராம், ஒலி வழிகாட்டி, 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பூச்சிகள் போன்றவற்றை ஆய்வு செய்தனர். இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**